<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS.NO.**117/2018

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 16.04.2026

**Pw1 ( மோகன்)**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி(1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

என் பெற்றோர்களை 1,2 பிரதிவாதிகளுக்கு யார் அறிமுகப்படுத்தி வைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. 2011 ம் ஆண்டு நடைபெற்ற பரிவர்தனை பற்றி எனக்கு நேரில் தெரியாது என்றால சரிதான். என் பெற்றோர் சார் பதிவாளர் அலுவகலத்திற்கு சென்று கிரயம் செல்லாது என புகார் கொடுத்தனர் என்றால சரி. அந்த புகாரின் அடிப்படையில் நீதிமன்றத்தை நாடி பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு சொல்லிவிட்டனர் என்றால் சரிதான். உயிர் சான்றிதழ் பொது அதிகாரம் கொடுத்தவர்கள் உயிருடன் உள்ளார்களா என்பதை உறுதிபடுத்துவதற்காக தான் பதிவாளர் அலுவலகத்தில் பெறப்படுகிறது என்றும், பொது அதிகாரம கொடுத்தவர்கள் பதிவாளர் முன்னிலையில் நேரில ஆஜரானதால் உயிர் சான்று குறித்து மேல்விசாரணை செய்ய வேண்டியதில்லை என முடிவு செய்துள்ளனர் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் கந்து வட்டி தொழில் செய்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு 2 ஏக்கர் பூமி மூலம் விவசாய வருமானம், வீடு சொந்தமாக உள்ளது என்றும், கடைகள் வாடகைக்கு விட்டு அதன் மூலம் வருமானம் வருகிறது என்றும் எனக்கு தெரியாது. நான் 3ம் பிரதிவாதிக்கு 3 லட்சம் பணம் கொடுப்பதற்கு வருமானம் இல்லை என பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 02.05.2018 ல் ஏப்ரல் மாத வட்டியும் பணம் ரூ.50,000/- கொடுத்ததாக என் தாயார் சொல்லி தான் தெரியும், எனக்கு நேரில் தெரியாது. நான் வழக்கிற்காக மேற்படி சங்கதிகளை பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் பெற்றோர் ஏற்படுத்திய பொது அதிகார ஆவணத்தை அவர்கள் ரத்து செய்யவில்லை என்றால் சரிதான். என் பெற்றோர்கள் ஏற்படுத்திய கிரயம் சட்டப்படியானது என்றும் துர்லாபம் அடைய வேண்டி பொய்யான விவரங்கள் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தை காலி செய்ய சொல்லி கேட்டனர் என்றும் அதை கால தாமதப்படுத்தவே இந்த வழகதை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி என் மீது அவ 179/2022 என்ற வழக்கை நான் சொததை காலி செய்ய வழக்கு தாககல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் பெற்றோர்கள்

கிரயத்தொகை வாங்கவில்லை என்று சொல்வதும் பத்திரங்கள் மோசடி என்று சொல்வதும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக ஆவணங்களை சேகரிக்க வேண்டி பொய்யான விவரங்களுடன் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா 3ம் பிரதிவாதி பெயரில் பெயர் மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். ஊராட்சியில் 3ம் பிரதிவாதி மனு செய்த தாவா சொத்தின் வீட்டு வரி, சொத்து வரி ஆகியவற்றிற்கு பெயர் மாற்றம் ஏற்பட்டு விட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகள் என்னை அடிக்க வந்தனர் என நான் சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 5 முதல் 8 பிரதிவாதிகள் என் உடன்பிறந்தவர்கள் என்றால சரிதான். அவர்கள் என்னுடன் வழக்கு நடத்த வரவில்லை என்பதால் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 5 முதல் 8 பிரதிவாதிகளுக்கு என் பெற்றோர் சொதததை விற்பனை செய்த விவரம் தெரியும் என்றும்,அதனால் தான அவர்கள் என்னுடன் வழக்கு நடத்த முன்வரவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகள் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.04.16 15:39:21 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS